## சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பல்கலைக்கழக அனுமதிகள் - கல்வி ஆண்டு 2020/2021 நுண்கலைமாணி (நாடகமும் அரங்கியலும்) பட்டப்படிப்பிற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைத் திறன்காண் பரீட்சை

## மாணவர்களுக்கான பொதுவான அறிவுறுத்தல்கள்

1. குறைந்தபட்சம் மாணவர்கள் SMART கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்த வேண்டும். இருப்பினும் கையேட்டுக்கணனி (Tablet), கையடக்க இசைக்கேளி (IPad) இருப்பின் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தலாம்.

2. Audio, Video, இணையம் என்பன தடங்கல் இல்லாமல் செயற்படும் இடத்தினைத் தெரிவுசெய்து, அவ்விடம் பரீட்சைக்குப் பொருத்தமானதா என்பதை முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

3. மாணவர்கள் அனைவரும் தங்கள் தேசிய அடையாள அட்டையுடன் தோன்றி, பரீட்சகரிடம் தங்கள் முகத்தை தெளிவாகத் தெரியும் வண்ணம் காண்பிப்பதன் மூலம் உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

4. கிடைத்தள நிலையில் (Land scape) பொருத்தமான பின்னணிச் சூழலில் தம்மை அடையாளப்படுத்தும் வகையில் தரப்படுகின்ற Zoom இணைப்பினூடாக இணைந்து கொள்ளல் வேண்டும்.

5. தங்களது செயன்முறையினை படமெடுப்பதற்கு ஒரு உதவியாளரை வைத்துக்கொள்வது விரும்பத்தக்கது.

6. மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் ஆற்றுகைகள், செயன்முறைகளை இடைவிடாது தொடர்ச்சியாக ஆற்றவேண்டும்.

7. மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்ட கால அளவினுள் தங்களது காணொளியை பதிவேற்றம் செய்யவேண்டும். காணொளி பதிவேற்றம் செய்யாத மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

8. ஒளிப்பதிவினை மேற்கொள்ளும் போது தங்களது ஆடல் அசைவுகளில் கைகால் செயற்பாடுகள் முழுமையாக பரீட்சகர் அவதானிக்கும் வகையில் அமைதல் அவசியமாகும்.

9. போதிய வெளிச்சமுள்ள நிலையில் பரீட்சகர்களுக்குத் தெளிவாகத் தெரியும் வண்ணம் ஆற்றுகை செய்யப்பட வேண்டும்.

10. தொழில்நுட்பப் பிரச்சினைகள் ஏற்படுமிடத்து உடனடியாக **sar_exam_svias@esn.ac.lk** என்ற மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது 065-2222663 / 0777883229 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## <u>விசேட அறிவுறுத்தல்கள்</u>

நடன, நாடகத்துறையின் நாடக செயன்முறைப் பரீட்சையானது, இரு கட்டங்களாக நடத்தப்படவுள்ளது. முதற்கட்டம் பரீட்சார்த்திகளால் அனுப்பப்படுகின்ற காணொளி பதிவுக்கான புள்ளிவழங்கலைக் கொண்டதாகவும் இரண்டாம் கட்டம் பரீட்சார்த்திகளது நேர்முகத் தேர்வுக்கான புள்ளி வழங்கலைக் கொண்டதாகவும் அமையவிருக்கின்றது.

## <u>முதற்கட்டம்</u>

இப் பகுதியானது பரீட்சார்த்திகளினால் அனுப்பப்படுகின்ற காணொளிப்பதிவாக இருக்கும் (Video). இக்காணொளிப்பதிவில் அடங்கியிருக்க வேண்டிய விடயங்கள்

இக் காணொளிப் பதிவு 3 - 5 நிமிடத்திற்குள் அமைதல் வேண்டும்.

**காணொளியினை (video) பதிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

1) காணொளியானது ஆரம்பம் முதல் இறுதிவரை இடை நிறுத்தப்படாமலும், திருத்தப்படாமலும் (Do not edit) பதிவுசெய்தல் வேண்டும்.
2) காணொளிகள் (videos) ஏற்கனவே பதிவிடப்பட்டவைகளாக இல்லாமல் புதிதாக பதிவு செய்யப்படுதல் வேண்டும். அவை சமூக வலைத்தளங்களில் பகிர்தலும் தவிர்க்கப்பட்டுள்ளது.
3) ஒப்பனை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. உடை, நாடகப் பயிற்சிகளுக்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும் (உதா: Bottom, T-shirt, சுடிதார்)

## <u>இரண்டாம் கட்டம்</u>

**இப் பகுதியானது பரீட்சார்த்திகள் மெய்நிகர் காணொளியில் இணைந்து (Zoom செயலி) பரீட்சகரினால் கேட்கப்படும் கேள்விகளுக்கு செயல்முறை ரீதியாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ பதிலளிப்பதாக இருக்கும்.**
**இதன்போது கடைப்பிடிக்க வேண்டிய அறிவுறுத்தல்கள்.**

1. ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 10 நிமிடங்கள் வழங்கப்படும்.
2. பரீட்சார்த்திக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு 10 நிமிடம் முன்னதாக மெய்நிகர் செயலிக்குள் உள் நுழைய வேண்டும்.

3. பரீட்சை நடைபெறும் போது படப்பிடிப்பாளரைத் தவிர வேறு எவரும் இருத்தல் கூடாது என்பதுடன் சூழல் மிக அமைதியான இடமாக இருத்தல் வேண்டும்
4. ஒப்பனை நேர்முகப் பரீட்சையின் போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. உடை, நாடகப் பயிற்சிகளுக்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும் (உதாரணம்: Bottom, T-shirt, சுடிதார்).

**குறிப்பு : இரண்டு கட்டங்களாக பரீட்சிக்கின்ற போது மாணவர்களிடமிருந்து முகபாவம், குரல்வளம், உடல்மொழி, லயம், அசைவும் வெளியும், கற்பனை போன்ற விடயங்கள் புள்ளியிடலில் கருத்திற் கொள்ளப்படும்.**